

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (18.12.2025) பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஜம்புலிங்கம் சாலையில் கட்டப்பட்டுள்ள பேரறிஞர் அண்ணா திருமண மாளிகையை திறந்து வைத்து, அங்கு நிறுவப்பட்டுள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் மார்பளவுச் சிலையை திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், அமைச்சர்கள் கே.என். நேரு, பி.கே.சேகர்பாபு, அன்பில் மகேஸ் பொய்யாமொழி, மேயர் திருமதி.ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, வெற்றியழகன், ஜோசப் சாமுவேல், துணை மேயர் மு.மகேஷ்குமார், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் கொளத்தூர் சட்டமன்றத் தொகுதியில் நேற்று (18.12.2025) வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 17.47 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஜி.கே.எம். காலனி அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளிக் கட்டடம் மற்றும் பெரியார் நகர் அமுதம் அங்காடி கட்டடம் அடிக்கல் நாட்டு விழாவில், கொளத்தூர் சட்டமன்றத் தொகுதியில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் மேற்கொண்ட வளர்ச்சி திட்டப் பணிகள் குறித்த புகைப்படக் கண்காட்சியை முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டார். இந்த நிகழ்ச்சியில், அமைச்சர்கள் கே.என்.நேரு, பி.கே.சேகர்பாபு, அன்பில் மகேஸ் பொய்யாமொழி, மேயர் திருமதி.ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, வெற்றியழகன், ஜோசப் சாமுவேல், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (18.12.2025) சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் கொளத்தூர் சட்டமன்றத் தொகுதியில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 17.47 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஜி.கே.எம். காலனி அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளிக் கட்டடம் மற்றும் பெரியார் நகர் அமுதம் அங்காடி கட்டடம் கட்டுமானப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். இந்த நிகழ்ச்சியில், அமைச்சர்கள் கே.என்.நேரு, பி.கே.சேகர்பாபு, அன்பில் மகேஸ் பொய்யாமொழி, மேயர் திருமதி.ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, வெற்றியழகன், ஜோசப் சாமுவேல் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று (18.12.2025) தலைமைச் செயலகத்தில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், ஷ்னைடர் எலெக்ட்ரிக் குழுமம் 718 கோடி ரூபாய் முதலீட்டில் 663 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் சென்னை மற்றும் கோயம்புத்தூரில் அமைந்துள்ள Schneider Electric India Private Limited (SEIPL) நிறுவனத்தின் ஆலைகளின் விரிவாக்கம் மற்றும் ஓசூரில் Schneider Electric IT Business India Private Limited (SEITB) நிறுவனத்தின் மின்கலன்கள் (Batteries) மற்றும் குளிர்விப்பு தீர்வுகளுக்கான (Cooling solutions) புதிய ஆலை அமைக்கும் திட்டங்களுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இந்நிகழ்வின்போது, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி. அருண் ராய், தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் மருத்துவர் தாரேஸ் அகமது, ஷ்னைடர் எலெக்ட்ரிக் குழுமத்தின் துணைத் தலைவர் அன்ஷும் ஜெயின், நிதி இயக்குநர் சுனில் சத்யப்ரகாஷ், சென்னை வளாகத்தின் தலைவர் விஸ்வநாதன் பொன்னுசாமி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் கொளத்தூர் சட்டமன்றத் தொகுதியில் நேற்று (18.12.2025) வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ஜி.கே.எம். காலனி அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளி அடிக்கல் நாட்டு விழாவில், தமிழ்நாடு அரசு கல்வித்துறையின் மேம்பாட்டிற்காக பல்வேறு திட்டங்களை சீரிய முறையில் செயல்படுத்தி வருவதற்காக பள்ளி மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டனர். இந்த நிகழ்ச்சியில், அமைச்சர்கள் கே.என்.நேரு, பி.கே. சேகர்பாபு, அன்பில் மகேஸ் பொய்யாமொழி, மேயர் திருமதி.ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, வெற்றியழகன், ஜோசப் சாமுவேல், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## ரூ.25.72 கோடியில் கட்டப்பட்ட “பேரறிஞர் அண்ணா மாளிகை”யை – முதல்வர் திறந்து வைத்தார்!

# ரூ.17.47 கோடியில் அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளிக் கட்டடம் - அமுதம் அங்காடி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்! 15 இணைகளுக்கு திருமணம் நடத்தி வைத்தார்!

**சென்னை, டிச. 19-**

**முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (18.12.2025) பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஜம்புலிங்கம் சாலையில் 25.72 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பேரறிஞர் அண்ணா திருமண மாளிகையை திறந்து வைத்து, 15 இணைகளுக்கு திருமணத்தை நடத்தி வைத்து, சீர்வரிசைப் பொருட்களை வழங்கி மணமக்களை வாழ்த்தினார். மேலும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் கொளத்தூர் சட்டமன்றத் தொகுதியில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 17.47 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஜி.கே.எம். காலனி அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளிக் கட்டடம் மற்றும் பெரியார் நகர் அமுதம் அங்காடி கட்டடம் கட்டுமானப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.**

### பெருநகர சென்னை மாநகராட்சி பேரறிஞர் அண்ணா திருமண மாளிகை திறப்பு!

கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மக்கள் தங்களது இல்லத் திருமணம் உள்ளிட்ட சுபநிகழ்ச்சிகளை குறைந்த செலவில் அதேசமயத்தில் அதிக வசதிமிக்க மண்டபத்தில் மனமகிழ்வுடன் நிறைவாக நடத்திடும் வகையில் ஜி.கே.எம். காலனி, ஜம்புலிங்கம் சாலையில் பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் 40,300 சதுரடி பரப்பளவில், 25.72 கோடி ரூபாய் செலவில் நவீன வசதிகளுடன் மிகப் பிரமாண்டமாக கட்டப்பட்டுள்ள பேரறிஞர் அண்ணா திருமண மாளிகையை முதலமைச்சர் அவர்கள் நேற்று திறந்து வைத்து, பார்வையிட்டார்.

அதனைத் தொடர்ந்து, பேரறிஞர் அண்ணா திருமண மாளிகையில் நிறுவப்பட்டுள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் மார்பளவுச் சிலையை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

இந்தத் திருமண மாளிகையின் தரைத்தளத்தில் இருசக்கர மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் நிறுத்தும் வசதி, முதலாவது தளத்தில் ஒரே சமயத்தில் 435 நபர்கள் அமர்ந்து உணவு அருந்தும் வகையில் உணவுக்கூடம், இரண்டாவது தளத்தில் 800 இருக்கைகளுடன் திருமண மண்டபம், மூன்றாம் தளத்தில் 10 எண்ணிக்கையிலான தங்கும் அறைகள், மின்தூக்கி வசதிகள் உள்ளிட்ட அனைத்து வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளது.

இப்புதிய பேரறிஞர் அண்ணா திருமண மாளிகையில் முதலமைச்சர் அவர்கள் 15 இணைகளுக்கு திருமணத்தை நடத்தி வைத்து, சீர்வரிசைப் பொருட்களை வழங்கி மணமக்களை வாழ்த்தினார்.

### சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் கொளத்தூர், ஜி.கே.எம். காலனி அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளிக் கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டுதல்

கொளத்தூர், ஜி.கே.எம். காலனியில் உள்ள அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளிக்கு 11.17 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 32,676 சதுர அடி கட்டட பரப்பளவில், தரை மற்றும் மூன்று தளங்களுடன், 23 வகுப்பறைகள்,

5 ஸ்மார்ட் வகுப்பறைகள், இயற்பியல், வேதியியல், கணினி மற்றும் அறிவியல் துறைகளுக்கான நான்கு நவீன ஆய்வகங்கள், தேர்வு மையம், நூலகம், ஆசிரியர்கள் அறை, அலுவலக அறை, கழிப்பறைகள், சிறார் விளையாட்டு பகுதிகள் ஆகிய வசதிகளுடன் கட்டப்படவுள்ள பள்ளிக் கட்டடத்திற்கு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

பின்னர், தமிழ்நாடு அரசு கல்வித்துறையின் மேம்பாட்டிற்காக பல்வேறு திட்டங்களை சீரிய முறையில் செயல்படுத்தி வருவதற்காக பள்ளி மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

### கொளத்தூர், பெரியார் நகர் அமுதம் அங்காடி கட்டுமானப் பணிக்கு அடிக்கல் நாட்டுதல்

கொளத்தூர், பெரியார் நகரில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வந்த பழமையான அமுதம் அங்காடியை மேம்படுத்தும் வகையில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் 6.30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 12,157 சதுர அடி கட்டட பரப்பளவில் தரை மற்றும் இரண்டு தளங்களுடன், இடமகன்ற அமுதம் பல்பொருள் அங்காடி, அலுவலக அறை, பணியாளர்கள் அறை, சேமிப்பு கிடங்கு, மின்தூக்கி வசதிகள், நகரும் படிக்கட்டுகள், நவீன கழிப்பறைகள், இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் நிறுத்துமிடம் ஆகிய வசதிகளுடன் கட்டப்படவுள்ள அமுதம் அங்காடிக்கு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

இந்த நிகழ்ச்சியில், நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி.ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் ப.தாயகம் கவி, வெற்றியழகன், ஜோசப் சாமுவேல், துணை மேயர் மு.மகேஷ்குமார், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, பள்ளிக் கல்வித்துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி.சந்திரமோகன், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் உறுப்பினர் செயலர்/முதன்மைச் செயலாளர் கோ.பிரகாஷ், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் முதன்மை செயல் அலுவலர் அ.சிவஞானம், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்குநர் முனைவர் ஆ.அண்ணாதுரை, கண்காணிப்பு அலுவலர் மற்றும் நகர் ஊரமைப்பு இயக்கக இயக்குநர் பா.கணேசன், பெருநகர சென்னை மாநகராட்சி வடக்கு வட்டார துணை ஆணையாளர் கட்டா ரவி தேஜா, தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப. ரங்கநாதன், மண்டல குழுத் தலைவர் திருமதி சரிதா மகேஷ்குமார் உள்ளிட்ட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், பள்ளிக்கல்வி இயக்குநர் முனைவர் ச. கண்ணப்பன், ஜி.கே.எம். காலனி அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் திருமதி ஜெயசாந்தி, கொளத்தூர் கபாலீஸ்வரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர் முனைவர் சி. லலிதா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தேனி தெற்கு மாவட்டம் தமிழக – கேரளா எல்லையில் உள்ள குமுளியில் ரூ.5.50 கோடி மதிப்பில் பணிமனை கூடிய புதிய பேருந்து நிலையத்தை போக்குவரத்துத் துறை அமைச்சர் சிவசங்கர் மற்றும் ஊராக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ.பெரியசாமி ஆகியோர் திறந்து வைத்தனர். உடன் தெற்கு மாவட்ட செயலாளர் கம்பம் ராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ., ஆண்டிபட்டி சட்டமன்ற உறுப்பினர் மகாராஜன் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர், அரசு அதிகாரிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.